


**07.05.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு தக்க பதில் அடி நடவடிக்கையாக **ஆபரேசன் சிந்தூர்** துல்லிய தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வெளியுறவு செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

**2.** பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் ஆபரேசன் சிந்தூர் தாக்குதல் நடத்தப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3.** எல்லை பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்டுள்ள தீவிர துப்பாக்கி சூட்டில் 9 பேர் உயிரிழந்தனர். 41 பேர் காயமடைந்தனர்.

**4.** தீவிரவாதத்தை வேரோடு களைய இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

**5.** மத்திய அரசு அனைத்து கட்சி கூட்டத்திற்கு நாளை அழைப்பு விடுத்துள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

*********

**விக்ரம் மிஸ்ரி**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள 9 தீவிரவாத முகாம்களை இந்தியா இன்று தகர்த்து அழித்ததாக மத்திய வெளியுறவு செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ராணுவ தலைவர்களுடன் இணைந்து இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதில் அடி வழங்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து இந்தியாவின் புலனாய்வு முகமைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தீவிரவாதிகளுடன் பாகிஸ்தானுக்கு உள்ள தொடர்புகள் அம்பலமானதாக அவர் கூறினார்.

மேலும் பல தாக்குதல்களை இந்தியா மீது பாகிஸ்தான் நடத்தகூடும் என்பது தெரியவந்ததாகவும், எனவே இதனை தடுத்து நிறுத்தி சவாலை எதிர்கொள்வது அவசியம் என்று இந்தியா கருதியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் பொதுமக்களுக்கும் உள்கட்டமைப்புகளுக்கும் சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தீவிரவாத குழுக்களின் இடங்கள் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டு 9 பயங்கரவாத முகாம்களை ராணுவம் வெற்றிகரமாக குறிவைத்து அழித்ததாக அவர் குறிப்பிட்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மிக கொடூரமானது என்று குறிப்பிட்ட திரு.மிஸ்ரி 25 இந்தியர்களும், நேபாளத்தை சேர்ந்த ஒருவரும் தங்கள் குடும்பத்தினர் முன்பு ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டதாக அவர் கூறினார்.

குடும்ப உறுப்பினர்களின் முன்பே சுற்றுலா பயணிகள் தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்ததாகவும் இதனால் குடும்பத்தினர் மன உலைச்சலுக்கு ஆளாகி நிலைகுலைந்ததாகவும் அவர் எடுத்துரைத்தார்.

2008ஆம் ஆண்டு மும்பை தாக்குதலுக்கு பின்னர் அதிக அளவு சிவிலியன்கள் உயிரிழந்த இந்த கொடுமையான தாக்குதலக்கு **லஷ்கர் இ தொய்பா**வின் துணை அமைப்**பான ரெசிஸ்டன்ட் ஃபிரண்ட்** என்ற அமைப்பு பொறுப்பேற்றதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் இந்த தாக்குதலில் பாகிஸ்தானுக்குரிய தொடர்பு அம்பலமானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து பஹல்காம் தாக்குதல் தீவிரவாதிகளும் இதை திட்டமிட்டவர்களும் நீதிக்குமுன் நிறுத்தப்பட வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே Resistance Front எனப்படும் இந்த TRF அமைப்பு பாகிஸ்தானை அடைக்கலமாக கொண்டு செயல்படுவதாக இந்தியா ஐ.நா.விடம் எடுத்துரைத்ததை அவர் குறிப்பிட்டார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பின்னர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இருந்து TRF பற்றிய குறிப்பை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் சென்ற மாதம் 25ஆம் தேதி வலியுறுத்தியதையும் திரு.விக்ரம் மிஸ்ரி சுட்டிக்காட்னார்.

இந்தியா மீது எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் தொடர்ந்து மேற்கொண்டு வந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய தீவிரவாத அமைப்புகளின் புகழிடமாக பாகிஸ்தான் திகழ்ந்து வந்த நிலையிலும் சர்வதேச நாடுகளுடன் பொய்யான தகவல்களை தெரிவித்து வந்ததாகவும் திரு.விக்ரம் மிஸ்ரி குற்றம் சாட்டினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் ஜம்மு காஷ்மீர் பகுதிகளிலும் நாட்டின் பிற பகுதிகளிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த தாக்குதல் நடத்தப்பட்டு இரு வாரங்கள் ஆன பின்னரும் தீவிரவாதிகள் மீதோ அதன் எல்லையில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீதோ பாகிஸ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதோடு தொடர்ந்து மறுப்பையும் குற்றசாட்டையும் வெளியிட்டு வந்ததால் இந்த துல்லிய தாக்குதலை நடத்துவதற்கான கட்டாயம் இந்தியாவிற்கு ஏற்பட்டதாக எடுத்துரைத்தார்.

**வாய்ஸ்**

*********

**ஷோஃபியா குரேஷி - வியாமிகா சிங்**

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் நள்ளிரவு 1.05 மணி முதல் 1.30 மணிக்குள் நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் **பஹவல்பூரில்** 9 தீவிரவாத முகாம்கள் தகர்க்கப்பட்டதாக இந்திய விமான படை கர்னல் **ஷோஃபியா குரேஷி** மற்றும் விங் கமாண்டர் **வியாமிகா சிங்** தெரிவித்துள்ளனர்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆண்டுகளாக பாகிஸ்தான் தீவிரவாதத்தை கட்டமைத்து, இதற்கான **ஆட்கள்தேர்வு**, முறையற்ற மையங்கள், பயிற்சி பகுதிகள், ஏவுதளங்கள் ஆகியவற்றை ஆக்கிரமிப்பு கஷ்மீர்' பகுதியில் ஏற்படுத்தப்பட்டதை அவர்கள் சுட்டிக்காட்டினார்.

ஆபரேசன் சிந்தூர் நடைமுறைகளையும் எவ்வாறு தீவிரவாத முகாம்கள் தகர்க்கப்பட்டது என்பதையும் இந்த தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டது பற்றியும் எடுத்துரைத்த இவ்விருவரும் பாகிஸ்தான் ராணுவம் மற்றும் சிவிலிய பகுதிகளை குறிவைக்காமல் கவனத்துடன் தீவிரவாத முகாம்களை மட்டுமே இலக்காக கொண்டதாக கூறினர்.

**வாய்ஸ்**

*********

**அமித்ஷா**

பஹல்காமில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கு இந்தியா வழங்கிய பதிலடியே ஆபரேசன் சிந்தூர் என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்தியா மீதும், இந்திய மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கு தக்க பதில் அடி கொடுக்க திரு. நரேந்திரமோடி அரசு உறுதி பூண்டிருப்பதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தை வேரோடு களைந்தெரிவதில் இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

இதனிடையே உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து துணை நிலை ஆளுநர் லெ.ஃப்டினன் மனோஜ் சின்ஹா மற்றும் முதலமைச்சர் திரு.உமர் அப்துல்லாவுடனும் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆபரேசன் சிந்தூரை தொடர்ந்து எல்லை பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எல்லை பாதுகாப்பு படையின் தலைமை இயக்குனருக்கு திரு.அமித்ஷா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் இருப்பதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுமுறையில் உள்ள துணை ராணுவ படை துருப்புகளை பணிக்கு திரும்புமாறு உத்தரவிட கோரி திரு.அமித்ஷா அதன் பிரிவு தலைவர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

*********

**பாகிஸ்தான் துப்பாக்கி சூடு**

இந்நிலையில் ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் எல்லை பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்ட தீவிர துப்பாக்கி சூட்டில் 9 பேர் உயிரிழந்தனர்.

41 பேர் காயமடைந்தனர்.

இந்திய ராணுவ படையினர் தொடர்ந்து பதிலடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதில் பாகிஸ்தான் தரப்பில் ஏராளமானோர் உயிரிழந்தனர்.

பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பாகிஸ்தான் நடத்திவரும் தொடர் தீவிரவாத துப்பாக்கி சூடு நடவடிக்கைகளால் எல்லை பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் தேதி இருநாடுகளுக்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டபின்னர் எல்லை பகுதிகளில் நடைபெறும் மிகப்பெரிய அத்துமீறல் தாக்குதல் நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

*********

**பிரதமர் பயணம் ரத்து**

இந்நிலையில் ஆபரேசன் சிந்தூர் அதிரடி தாக்குதலை தொடர்ந்து குரேசியா, நார்வே, நெதர்லாந்து நாடுகளுக்கான பிரதமர் திரு.நரேந்திரமோடியின் அரசு முறை பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

*********

**அனைத்து கட்சி கூட்டம்**

இந்நிலையில் ஆபரேசன் சிந்தூர் எதிரொலியாக மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லி நாடாளுமன்ற வளாகத்தில் நாளை காலை 11 மணிக்கு அனைத்து கட்சி கூட்டம் நடைபெறுகிறது.

*********

**பிரதமர்**

நாட்டின் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொழில்முனைவோர் இளையோர் சக்திகளுக்கு விண்வெளி பிரிவில் செயலாற்றுவதற்கான வாய்ப்புகளை இந்தியா வழங்குவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

விண்வெளி ஆய்வு தொடர்பான சர்வதேச மாநாட்டை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் நம் நாட்டில் 250 விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் நவீன விண்வெளி தொழில்நுட்பங்களுடன் செயல்படுவதாக எடுத்துரைத்தார்.

அறிவியல் சார்ந்த ஆய்வுகளின் எல்லைகளை கடந்து இந்தியா தொடர்ந்து புத்துணர்ச்சியுடன் முன்னேற்ற பாதையில் செல்வதாக அவர் கூறினார்.

நாட்டின் ககன்யான் மனிதர்களை கொண்ட விண்வெளி திட்டம் தேசத்தின் எதிர்பார்ப்புகளை எடுத்துரைப்பதாக கூறினார்.

இனிவரும் வாரங்களில் ISRO NASA கூட்டு இயக்கத்தின் மூலம் இந்திய விண்வெளி வீரர் சர்வதேச விண்வெளி பயணம் மேற்கொள்ள இருப்பதாக குறிப்பிட்டார்.

வரும் 2035ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி மையம் ஏற்படுத்தப்பட்டு எல்லைகளை கடந்து ஆராய்ச்சியில் புதிய அத்யாயத்தை தோற்றுவிக்கும் என்றார்.

2040ஆம் ஆண்டு இந்தியா நிலவில் காலடி பதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய விண்வெளி ஏவுதளங்கள் மூலம் 100 செயற்கைகோள்கள் ஒருங்கிணைந்து ஏவப்பட்டதாகவும்,

34 நாடுகளுக்காக 400க்கும் மேற்பட்ட செயற்கைகோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய உச்சங்களை எட்டி சாதனைகளை படைப்பதே இந்தியாவின் விண்வெளி திட்டத்தின் நோக்கம் என்று பிரதமர் எடுத்துரைத்தார்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**